சுருக்கம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை – அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை கழிவு செய்யப்பட்ட இரு சக்கர ஊர்திக்கு மாற்றாக புதிய இரு சக்கர ஊர்தி வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (ஏடி–1) துறை

அரசாணை (நிலை) எண்.382

நாள் 04.12.2014.
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய – கார்த்திகை 18

படிக்க:

மருத்துவக்கல்வி இயக்குநரின் கடித எண்.14428/திவ–1/2/2014,
நாள்: 06.03.2014.

----

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மதுரை, அரசு இராசாசி மருத்துவமனை, முதல்வர், அவர்கள் மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10 அவர்களின் செயல்முறை ஆணை மூ.மு.எண்.3283/ ம(ம)ம/3/2010, நாள் 12.02.2010 மற்றும் இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் ஊர்திகள் பராமரிப்புத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை எண். எச்5/9722/2010, நாள் 27.07.2010–ன்படி 10.08.2010 நாளன்று, அம்மருத்துவமனையின் இரு சக்கர ஊர்தி எண்.த.நா.07/அ/0038 (TN 07 G 0038) ஏலதாரரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று மருத்துவக் கல்வி இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

2. மேலும் அம்மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் மோட்டார் சைக்கிள் மெசஞ்சர்களுக்கு பணிகளை செய்வதற்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனால் உரிய காலத்தில் பணிகள் நிறைவுறாமையால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. மேலும் உள்ளூர் அஞ்சல் பணிகள், அவசர மற்றும் அத்தியாவசிய மருந்துகளைக் கொள்முதல் செய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் (Hand Quotations) பெற்று வருதல், சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளையில் அரசு வழக்குரைஞர்களை சந்தித்தல், முதல்வரிடமிருந்து E.Q கடிதத்தைப் பெற்று தொடர்வண்டித் துறையின் கண்காணிப்பாளரிடம் சேர்த்தல், D.I.L உள்ளூரிலுள்ள உறவினர்களிடம் சேர்த்தல், மாவட்ட ஆட்சியரின் அலுவலகம் / முகாம் அலுவலகத்திற்குச் சென்று கோப்புகளில் கையொப்பம் பெற்று வருதல், அவ்வலுவலகத்திலிருந்து பெறப்படும் கடிதங்களைக் கொண்டு வருதல் முதலிய பணிகளை மோட்டார் சைக்கிள் மெசஞ்சர்கள் செய்து வருகின்றனர் என்றும் கழிவு செய்யப்பட்ட ஊர்திக்கு மாற்றாக, புதிதாக 100 சிசி திறனுடைய இருசக்கர ஊர்திக்கான விலைப்புள்ளியை திருவாளர்கள் TVS மோட்டார் கம்பெனி,

..2.

மதுரை அவர்களிடமிருந்து TVS Sport KS(100 CC) மற்றும் TVS Sport ES(100 CC) ஆகிய மாடல்களுக்கான DGS&Dயின் ஒப்பந்த விலைப்புள்ளி பட்டியல் பெறப்பட்டுள்ளது என்றும் இதற்கு எரிபொருள் செலவினம் ஒரு மாதத்திற்கு (30 லிட்டர்) ரூ.2,146 வீதம் ஒரு வருட செலவினம் ரூ.25,752 என்றும் செலவிடப்படுகின்றது என்றும் மருத்துவக் கல்வி இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை கழிவு செய்யப்பட்ட இரு சக்கர ஊர்திக்கு மாற்றாக புதிய இரு சக்கர ஊர்தியான TVS Sport ES(100 CC)யினை ரூ.40,740/- (ரூபாய் நாற்பதாயிரத்து எழுநூற்றி நாற்பது மட்டும்) மற்றும் எரிபொருள் செலவினமான ரூ.25,752/- (ரூபாய் இருபத்தைந்தாயிரத்து எழுநூற்றி ஐம்பத்திரண்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. மருத்துவக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு மிக கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் கழிவு செய்யப்பட்ட இரு சக்கர ஊர்திக்கு மாற்றாக புதிய இரு சக்கர ஊர்தியான TVS Sport ES(100 CC)யினை வாங்குவதற்கு ரூ.40,740/- (ரூபாய் நாற்பதாயிரத்து எழுநூற்றி நாற்பது மட்டும்) மற்றும் எரிபொருள் செலவினமாக ரூ.8584/- (ரூபாய் எட்டாயிரத்து ஐநூற்று எண்பத்தினான்கு மட்டும்) ஆக மொத்தம் ரூ.49,324/- (ரூபாய் நாற்பத்தொன்பதாயிரத்து முன்னூற்று இருபத்தினான்கு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து மருத்துவக் கல்வி இயக்குநருக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2210-மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01. நகர்ப்பகுதி
சுகாதாரப்பணிகள் – ஆங்கிலமுறை மருத்துவம் – 110
மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – I திட்டத்தில்
சேராதது – DN இராஜாஜி அரசு மருத்துவமனை, மதுரை
21 மோட்டார் வண்டிகள் – 01 வாங்குதல் (ரூ.40,740/-)
(த.தொ.கு.2210-01-110-DN -2114)
45 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் (ரூ.8584/-)
(த.தொ.கு.2210-01-110-DN - 4505)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2014-2015ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். 2014-15-ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கம் செய்வதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மருத்துவக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. 2014-2015ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான செயற் குறிப்பை நிதித் (சுகாதாரம்-II) துறைக்கு அனுப்பும்போது இச்செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

..3.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.61611/H-II/2014,நாள்:24.11.2014ல் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப்பேரேடு எண்.1541 (ஆயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்று) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவக்கல்வி இயக்குநர், சென்னை–10.
முதல்வர்,
அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை.
மாநிலக்கணக்காயர், சென்னை–18/35
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
நகல்:
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம்,சென்னை–9.
நிதி மற்றும் பொதுப்பணித் உள் (போ. வ ) துறை, சென்னை–9.
நிதித் (வ.செ. பொது–2 /சுகாதாரம் – II) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–09.
இருப்புக் கோப்பு / சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.